# வளங்கள்

### சட்ட உதவி ஒண்டாரியோ (Legal Aid Ontario)

பொதுவான தகவல்களை அறிவதற்கும் குறைந்த வருமானம் பெறும் வாடிக்கையாளர்களுக்கு உதவக்கூடிய வழக்கறிஞர்களுக்கான பரிந்துரைகளைப் பெறுவதற்கும், காணுங்கள் www.legalaid.on.ca அல்லது 1-800-668-8258 எனும் என்னில் திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப. 8 மணி முதல் பி.ப. 5 மணி வரை அழைத்திடுங்கள்

### சட்டச் சமுதாய வழக்கறிஞர் பரிந்துரைச் சேவை (Law Society Lawyer Referral Service)

தனியார் வழக்கறிஞர்களுக்கான பரிந்துரைகளைப் பெறுவதற்கு, காணுங்கள் http://lsrs.lsuc.on.ca/lsrs/ அல்லது 1-800-268-8326 எனும் எண்ணில் அழைத்திடுங்கள்; முதல் 30 நிமிடங்களுக்கு இலவசம்

### ஒண்டாரியோ சமுதாயச் சட்டக் கல்வி (Community Legal Education Ontario)

குடும்பச் சட்டம், குடிவரவுச் சட்டம் மற்றும் நீதிமன்ற முறைமை தொடர்பில் பொதுவான தகவல்களை அறிந்து கொள்வதற்கு காணுங்கள் www.cleo.on.ca, *ஒண்டாரியோவில் குடும்பச் சட்டச் வளங்கள் (Family Law Resources in Ontario)* என்ற இதன் ஆன்லைன் சிறு நூல், வழக்கறிஞரொருவரைக் தேடுவது எவ்வாறு, ஆன்லைனில் தகவல்களைத் தேடுதல், நீதிமன்றங்களில் உதவிகளைப் பெறுதல் என்பன தொடர்பான தகவல்களை வழங்குகின்றது.





# குடியேறியவர்கள் மற்றும் நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளவர்களுக்கான பாதுகாவல் மற்றும் அணுகல் விவகாரங்கள்

Legal Aid Ontario
Aide juridique Ontario

இந்தச் சிறுநூல் பெற்றோராகவும், தங்களது துணைவர்களிடமிருந்து பிரிந்து வாழ்பவர்களாகவும் உள்ள அகதிகளின் உரித்துக் கோரல்கள் தொடர்பான முக்கியமான தகவல்களைக் கொண்டுள்ளது.

# உள்ளடக்கம்


1 குடிவரவு அந்தஸ்து மற்றும் பாதுகாவலர் உரிமைப் பிரச்சினைகள்

6 மற்றைய பெற்றோருடனான சட்டப் பிரச்சினைகள்

10 வளங்கள்

# குடிவரவு அந்தஸ்து மற்றும் பாதுகாவலர் உரிமைப் பிரச்சினைகள்

## நான் ஒரு கனேடியப் பிரஜை அல்ல, அத்துடன் எனக்கு கனடாவில் சட்ட அந்தஸ்தும் இல்லை இவ்வாறிருக்கும் நிலையில் என்னால் எனது பிள்ளைகளுக்கான பாதுகாவலர் உரிமையைப் பெற முடியுமா?

பிள்ளையின் பாதுகாவல் மற்றும் அணுகலுக்கான உரிமை, பாதுகாவல் அல்லது அணுகல் உரிமைக் கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான உங்கள் இயலுமை, அல்லது உரிமைக் கோரிக்கையொன்றுக்குப் பதலளிப்பதற்கான உங்கள் இயலுமை என்பன தொடர்பில் எதுவித தாக்கத்தையும் உங்கள் குடிவரவு அந்தஸ்து ஏற்படுத்தாது.

உங்கள் பிள்ளை இம்மாகாணத்தில் வாழும் காலம் வரையிலும், ஒண்டாரியோ நீதிமன்றங்கள் உங்கள் வழக்குகளை விசாரித்து தீர்மானமொன்றுக்கு வர முடியும். இது பின்வருவோரில் எந்தவொரு ஆளுக்கும் ஏற்புடையதாகும்:

- கனேடியப் பிரஜைகள்
- நிரந்தர வதியுநர்கள்
- நிபந்தனைக்குட்பட்ட நிரந்தர வதியுநர்கள்
- கனடாவில் சட்ட அந்தஸ்து இல்லாத ஆட்கள்
- குடிவரவு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள ஆட்கள்

## நான் கனடாவை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டால் என்ன நடக்கும்?

நீங்கள் அல்லது மற்றப் பெற்றார் என இருவரில் ஒருவர் கனடாவை விட்டு வெளியேறி, வேறு ஒரு நாட்டுக்கு இடம்பெயர முடியும் என்று நீதிமன்றம் சிந்திக்குமானால், பாதுகாவல் அல்லது அணுகல் கட்டளையை உருவாக்கும் போது நீதிமன்றங்கள் இத்தகவல்களைக் கவனத்திற் கொள்ளும். நீங்கள் தன்னார்வ அடிப்படையில் வெளியேறுவதாக இருந்தாலும் அல்லது நாடு கடத்தப்படுவதாக இருந்தாலும் இவ்விடயம் உங்களுக்குப் பொருந்தும்.

## மேரியாவுக்கும் பிலிப்புக்கும் இடையில் குறுகிய கால உறவு காணப்பட்டதுடன், பொபி பிறந்ததன் பின்னர் அந்த உறவு முறிந்துவிட்டது.

பிலிப் அவ்வப்பொழுது பொபியைப் பார்க்க வந்ததுடன் சில செலவுகளுக்கான பணத்தையும் வழங்கினார், ஆனால் மேரியா, பொபியை எப்போதும் பராமரித்து வந்தார். மேரியாவுக்கு கனடாவில் சட்ட அந்தஸ்து காணப்படவில்லை, அத்துடன் அவளுடைய தாய் நாட்டுக்கு நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியவளாகவும் இருந்தாள்.

பொபியின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டே நீதிபதி தீர்மானம் எடுப்பார். இத்தீர்மானம் சிலவேளை, மேரியா தனது சொந்த நாட்டுக்கு திரும்பினாலும் அல்லது திரும்பாவிட்டாலும் பொபியின் பாதுகாவலர் உரிமையை மேரியாவுக்கு வழங்குவதாக அமையக்கூடும்.

## எனக்கு சட்டபூர்வமான குடிவரவு அந்தஸ்து இல்லை, ஆனால் குடும்ப விவகாரமொன்றுக்காக குடும்ப நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. நீதிமன்றத்துக்குச் செல்வது எனது அந்தஸ்தைப் பாதிக்குமா?

உங்களுக்கு கனடாவில் குடிவரவு அந்தஸ்து இல்லாத விடத்து, குடும்ப வழக்கு ஒன்றை ஆரம்பிப்பது உங்களை நாடு கடத்தும் அபாயச் சாத்தியத்திற்கு உள்ளாக்கலாம்.

நீங்கள் குடும்ப நீதிமன்றத்துக்குச் செல்கின்ற போது, நீதிமன்ற நடைமுறைகளுக்கு இணங்க, குடும்ப நீதிமன்ற ஆவணங்களில் தொடர்பு கொள்வதற்கான தகவல்களை நீங்கள் வழங்குவது அவசியமாகும். இதன் கருத்து, குடிவரவு நேர்காணலொன்றுக்குச் சமுகமளிக்குமாறு உங்களுக்கு கடிதமொன்றை அனுப்புவதன் மூலம், குடிவரவு அதிகாரிகள் நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்பதைத் தேடியறிந்து உங்களை நாடு கடத்துவதற்கான செயன்முறை ஆரம்பிக்க முடியும் என்பதாகும்.

## பாதுகாவல் அல்லது அணுகல் கட்டளையொன்றை பிறப்பிக்கும் போது நீதிபதி எவற்றைக் கவனத்திற் கொள்வார்?

பொதுவாக, பெற்றோர் இருவருடனும் பிள்ளை செலவிடும் நேரம் தொடர்பில் நீதிமன்றம் மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. நீதிபதி பிள்ளைகளின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு, அதாவது பின்வருவன போன்ற பிரச்சினைகளைக் கவனத்திற் கொண்டு தீர்மானமொன்றுக்கு வருவார்:

- பிள்ளைக்கு நிலையான, பாசம் மிகுந்த மற்றும் பாதுகாப்பான வீட்டுச் சூழலொன்றறைச் சிறப்பாக வழங்கக்கூடிய பெற்றார் யார்?
- பிள்ளையின் முன்விருப்பத்தேர்வுகள் யாவை?
- பிள்ளையின் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ள பெற்றார் யார்?
- பிள்ளையின் சிறந்த நலன் மற்றொரு நாட்டில் வாழ்வதா அல்லது கனடாவில் தங்கியிருப்பதா (பெற்றோரில் ஒருவர் தன்னார்வமாக அல்லது நாடு கடத்தலின் காரணமாக பிள்ளையுடன் நாட்டிலிருந்து வெளியேற முடியும் என்று நீதிமன்றம் நம்புமாயின்)?

நீதிபதி:

- பெற்றோர் இருவரும் கனடாவில் உள்ள போது பாதுகாவல் மற்றும் அணுகலை வழங்குவதற்கான தற்காலிகக் கட்டளையொன்றையும், பெற்றோரில் ஒருவர் கனடாவை விட்டு வெளியேறுவாராயின் ஏற்புடையதாகும் வேறுபட்ட விதிமுறைகளைக் கொண்ட கட்டளையொன்றையும் பிறப்பிக்கக்கூடும்
- பெற்றோர் நாட்டில் உள்ளாரா அல்லது இல்லையா என்பதைக் கவனத்திற் கொள்ளாது, பெற்றோரில் குறித்த ஒருவரின் பாதுகாவலில் இருப்பதுதான் பிள்ளையின் சிறந்த நலனாக அமையும் என்று உணரக்கூடும்
- பிள்ளையைக் கனடாவிலிருந்து அக்கற்றக் கூடாது என்று கூறும் அகற்றாக் கட்டளையொன்றை பிறப்பிக்கக்கூடும். இத்தகைய கட்டளையொன்று நாடு கடத்தலை நிறுத்தமாட்டாது. நீங்கள் நாடு கடத்தப்படும் நிலையை எதிர்கொண்டிருப்பின், உங்கள் பிள்ளைக்கான பாதுகாவலர் உரிமையும், பின்னர் அகற்றாக் கட்டளையொன்றும் உங்களுக்கு வழங்கப்பட்டிருப்பின், இப்போதே குடிவரவு வழக்கறிஞரொருவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## லீலாவும் பீட்டரும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் விவாகரத்துச் செய்து கொண்டார்கள். அவர்களுடைய ஏழு வயது மகன் ஜோய் ஒவ்வொரு வாரத்தையும் லீலாவுடனும் பெரும்பாலான வார இறுதி நாட்களைப் பீட்டருடனும் கழிக்கின்றான்.

கஷ்டமான மருத்துவப் பிரச்சினைகளுக்காக ஜோய்க்கு உள்ளூர் சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. லீலா அவளுடைய தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளாள்.

பிள்ளையின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு, லீலா கனடாவில் இருக்கும் காலத்தில் பெற்றோர் இருவரும் கூட்டாகப் பாதுகாவலர் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் ஆனால் லீலா நாடு கடத்தப்படுவாராயின் பீட்டருக்கு பாதுகாவலர் உரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் நீதிபதியால் தீர்மானிக்கப்படுவது சாத்தியமானதாகும்.

## எனது பிள்ளையின்றி என்னை மாத்திரம் நாடு கடத்த முடியுமா?

ஆம். உங்கள் பிள்ளையின் பாதுகாவல் உங்கள் பொறுப்பில் இல்லாதவிடத்து, பிள்ளையின்றி உங்களை மாத்திரம் நாடு கடத்த முடியும்.

உங்கள் பிள்ளையின் பாதுகாவல் உங்கள் பொறுப்பில் காணப்படுமாயின், உங்கள் பிள்ளைக்கான அகற்றாக் கட்டளையொன்று காணப்பட்டாலும் கூட, உங்களுடன் உங்கள் பிள்ளையும் நாட்டிலிருந்து வெளியேறுவதை உறுதிப்படுத்துவதற்கு நீதிமன்றம் உங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கும். எவ்வாறாயினும், அகற்றாக் கட்டளை இரத்துச் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான செயலூக்கமிக்க நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டியிருக்கும். நீங்கள் சாத்தியமான வரையில் விரைவாக வழக்கறிஞரொருவருடன் பேச வேண்டும்.

## குடும்ப நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைப் பதிவு செய்வதன் மூலம் என்னை நாடு கடத்துவதை என்னால் தடுக்க முடியுமா?

இல்லை. நாடு கடத்தும் கட்டளையொன்றை நிறுத்தும் ஆற்றல் ஒண்டாரியோவின் குடும்ப நீதிமன்றங்களுக்கு இல்லை.

பின்வரும் சந்தர்ப்பங்களில் இறுதியான பாதுகாவல் கட்டளையொன்று பிறப்பிக்கப்படும் வரையில் உங்களை நாடு கடத்துவது தாமதப்படுத்தப்படுவது சாத்தியமாகும்:

- அது வரையில் ஒரு இறுதியான பாதுகாவல் கட்டளை பிறப்பிக்கப்பட்டிராதவிடத்து
- நீங்கள் தொடர்ந்தும் நீதிபதியின் முன்னிலையில் வாதங்களை முன்வைத்து,
- பிள்ளைக்கு யாரால் மிகச் சிறந்த பராமரிப்பை வழங்க முடியும் என்பது தொடர்பில் உங்களுக்கும் மற்றும் பெற்றாருக்கும் இடையில் உண்மையான பாதுகாவலர் உரிமைப் பிரச்சினையொன்று காணப்படுதல்.

இவ்வாறிருந்த போதிலும் கூட, உங்களை நாடு கடத்துவது தாமதிக்கப்படாதிருக்க முடியும். நாடு கடத்தல் கட்டளையொன்றைத் தவிர்ப்பதற்காக அல்லது தாமதப்படுத்துவதற்காக மாத்திரம் பாதுகாவலர் உரிமைக் கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றங்கள் பொதுவாக நாடு கடத்தலைத் தாமதப்படுத்தாது.

## நாடு கடத்தப்படுவதைத் தவிர்த்து கனடாவில் எனது பிள்ளையுடன் தங்குவதற்காக நான் செய்யக்கூடிய ஏதேனும் விடயங்கள் உள்ளனவா?

கனடாவில் தொடர்ந்திருப்பதற்கான சட்ட அந்தஸ்தொன்றைப் பெறுவதற்கு முயற்சிப்பதற்காவும், சில சந்தர்ப்பங்களில் உங்களை நாடு கடத்துவதை நிறுத்துவதற்காக அல்லது தாமதப்படுத்துவதற்கு முயற்சிப்பதற்காகவும் உங்களால் குடிவரவு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியலாம்.

உதாரணமாக, நீங்கள் கனடாவில் தங்கியிருப்பதற்கு அனுமதி கோரும் **மனிதாபிமான மற்றும் கருணை விண்ணப்பம் (Humanitarian and Compassionate (H&C) application**) ஒன்றை கனடாவின் குடியுரிமை மற்றும் குடிவரவு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க முடியும். இந்த விண்ணப்பம் வெற்றியளிப்பதற்கு, நீங்கள் கனடாவில் நிலைபெற்றுள்ளதையும் நீங்கள் உங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்றால் சிரமங்களுக்கு ஆளாக வேண்டி ஏற்படும் என்பதையும் நீங்கள் காட்டுவது அவசியமாகும். உங்கள் மனிதாபிமான மற்றும் கருணை விண்ணப்பம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது குடிவரவு அதிகாரிகள் உங்கள் பிள்ளையின் சிறந்த நலன்களைக் கவனத்திற் கொள்வது அவசியமாகும்.

எவ்வாறாயினும், மனிதாபிமான மற்றும் கருணை விண்ணப்பம் தீர்மானிக்கப்படாத நிலையிலுள்ள ஒருவரை நாடு கடத்தி விட்டு அந்த ஆள் கனடாவுக்கு வெளியிலுள்ள நிலையில், அந்த விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்குவதா இல்லையா என்று தீர்மானிப்பதற்கான அதிகாரம் குடிவரவு அதிகாரிகளுக்கு உள்ளது.

சில சந்தர்ப்பங்களில், நாடு கடத்தலைத் தள்ளிப் போடுவதற்கான அல்லது நிறுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க உங்களால் இயலக்கூடும்:

- உங்கள் மனிதாபிமான மற்றும் கருணை (H&C) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், உங்கள் மனிதாபிமான மற்றும் கருணை விண்ணப்பம் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் வரையில் நீங்கள் நாடு கடத்தலைத் தாமதப்படுத்துமாறு சமஷ்டி நீதிமன்றத்திடம் (Federal Court) கோருவதற்காக வழக்கறிஞரொருவரை நீங்கள் வாடகைக்கு அமர்த்தக் கூடியதாக இருக்கும்.
- உங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்வது தொடர்பில் நீங்கள் அச்சத்துடன் இருப்பீர்களாயின், அகதி உரிமைக் கோரிக்கையொன்றை அல்லது **அகற்றலுக்கு முன்னரான அபாயச் சாத்திய மதிப்பீடு (Pre-Removal Risk Assessment)** என்று அழைக்கப்படும் மற்றொரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் சாத்தியம் தொடர்பில் குடிவரவு வழக்கறிஞரொருவருடன் நீங்கள் பேச விரும்பலாம்.
- குடும்ப அனுசரணை போன்ற வேறு ஏதேனும் தெரிவுகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காகவும் நீங்கள் குடிவரவு வழக்கறிஞரொருவருடன் பேச முடியும்.

**திமித்ரிக்கும் ஜென்னாவுக்கும் இடையிலான உறவு சிக்கலாகக் காணப்படுகின்றது. தங்களது மகள் மரிக்காவின் பாதுகாவலர் உரிமை தனக்கே வழங்கப்பட வேண்டும என்று இருவரும் விரும்புகின்றனர்.**

மரிக்காவை தனது சொந்த நாட்டுக்கு அழைத்துச் செல்லப் போவதாக திமித்ரி அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அவருக்கு கனடாவில் சட்ட அந்தஸ்து இல்லை. அவர் மனிதாபிமான மற்றும் கருணை விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ள போதிலும் நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளார்.

திமித்ரிக்கு முழுமையான பாதுகாவலர் உரிமையையும், ஜென்னாவுக்கு வார இறுதி நாட்களில் அணுகல் வாய்ப்பையும் வழங்கி நீதிபதி தீர்ப்பளிக்கின்றார்.

# மற்றைய பெற்றாருடனான சட்டப் பிரச்சினைகள்

## மற்றைய பெற்றார் எனது பிள்ளையுடன் கனடாவை விட்டு வெளியேறி அவர்களுடைய சொந்த நாட்டுக்குச் செல்வார் என்று நான் அஞ்சுகிறேன். இதனை நிறுத்துவதற்கான வழிமுறையொன்று உள்ளதா?

ஒரு பெற்றார் பிள்ளையொருவருடன் வெளியேறுகின்ற போது, அப்பிள்ளையை கனடாவுக்கு மீள அழைத்து வருவது மிகவும் சிரமமானதாகும். பிள்ளை கனடாவை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கு முயற்சிப்பது சிறந்ததாகும். சில உபாயங்களை இங்கே தருகின்றோம்:

- உங்கள் பிள்ளைக்கான அகற்றாக் கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு நீங்கள் நீதிமன்றத்திடம் கோர முடியும். அந்தப் பிள்ளை நீதிமன்றக் கட்டளையின்றி அல்லது உங்களுடைய எழுத்துமூலமான அனுமதியின்றி கனடாவை விட்டு வெளியேற முடியாது என்று இக்கட்டளை கூறுகின்றது. எவரேனும் ஒருவர் பிள்ளையொன்றுடன் எல்லையைக் கடப்பாராயின், அந்த ஆள் பிள்ளையுடன் கனடாவை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் நீதிமன்றக் கட்டளையை அல்லது கடிதத்தைக் காட்டுமாறு குடிவரவு அதிகாரிகள் பொதுவாகக் கோருவார்கள்.

- நீங்கள் அல்லது நீதிமன்றம் பிள்ளையின் கடவுச்சீட்டை வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கும் கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு நீங்கள் நீதிமன்றத்திடம் கோர முடியும். சிலவேளைகளில் நீதிமன்றம் மற்றைய பெற்றாரின் கடவுச்சீட்டையும் வைத்திருக்க முடியும்.
- உங்கள் பிள்ளையின் கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் கையொப்பமிட முடியாது என்று நீங்கள் மறுக்கலாம். பிள்ளையொருவருக்கு கனேடியக் கடவுச்சீட்டொன்றைப் பெறுவதற்கு, கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் பெற்றோர் இருவரும் கையொப்பமிடுவது அவசியமாகும்.

பாதுகாவலர் உரிமை உங்களிடம் உள்ள நிலையில், மற்றைய பெற்றார் உங்கள் பிள்ளையை நீதிமன்றக் கட்டளையின்றியோ, உங்கள் அனுமதியின்றியோ நாட்டுக்கு வெளியே அழைத்துச் செல்வாராயின் (இது “பெற்றோர் சிறுவர் கடத்தல்” என்றும் அழைக்கப்படும்) நீங்கள்:

- ஆலோசனைக்கு வழக்கறிஞரொருவரைத் தொடர்பு கொள்ள வேண்டும் மற்றும்/ அல்லது
- கனடாவின் வெளிநாட்டலுவல்கள், வர்த்தக மற்றும் அபிவிருத்தித் திணைக்களத்தின் (Canada’s Department of Foreign Affairs, Trade and Development) ஒரு பகுதியாகவுள்ள எளிதிற் தாக்கமுறும் தன்மை கொண்ட பிள்ளைகளுக்கான ஆலோசனை அலகை (Vulnerable Children’s Consular Unit) தொடர்பு கொள்ள வேண்டும். நீங்கள் அவர்களை1-800-387-3124 என்ற இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளலாம் அல்லது மேலும் தகவல்களை travel.gc.ca/child எனும் இணையதளத்தில் பெறலாம்.

திமித்ரி, மரிக்காவுடன் தன்னார்வமாக நாட்டை விட்டு வெளியேறுவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மரிக்கா கனடாவை விட்டு வெளியேற முடியாது என்ற அகற்றாக் கட்டளையொன்றை நீதிபதி பிறப்பிக்கக்கூடும்.

திமித்ரி விரைவில் நாடு கடத்தப்படுவார் என்று குடிவரவு அதிகாரிகள் கூறுவார்களாயின், அகற்றாக் கட்டளையை முடிவுக்கு கொண்டு வருமாறு கோரும் அவசரப் பிரேரணையொன்றை குடும்ப நீதிபதியிடம் திமித்ரி முன்வைக்க முடியும். நிலைமையில் பாரிய, எதிர்பாராத மாற்றங்கள் இருந்தாலேயன்றி அவசரப் பிரேரணைக்கு அனுமதி வழங்கப்படும் என்பதை விசேடமாகக் குறிப்பிடுமாறு நீதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கவும் திமித்ரியால் இயலலாம்.

## நான் நீதிமன்றக் கட்டளையொன்றை அல்லது மற்றைய பெற்றாரிடமிருந்து அனுமதியைப் பெற்றாலன்றி எனது பிள்ளை கனடாவை விட்டு வெளியேற முடியாது என்று கூறும் அகற்றாக் கட்டளையொன்றை நீதிபதி பிறப்பித்துள்ளார். நான் நாடு கடத்தப்பட்டால் என்ன நடக்கும்?

நீங்கள் உங்கள் பிள்ளையை உங்களுடன் அழைத்துச் செல்ல முடியுமா என்பது பிள்ளையின் பாதுகாவலர் உரிமை உங்களுக்கு உள்ளதா இல்லையா என்பதிலேயே தங்கியுள்ளது. சில சந்தர்ப்பங்களில், பெற்றோர் இருவரும் கனடாவில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குடும்ப நீதிமன்ற நீதிபதி பெற்றோரில் ஒருவருக்கு முழுமையான பாதுகாவலர் உரிமையை வழங்குவார். ஏனைய சந்தர்ப்பங்களில், இரண்டு பாதுகாவல் மற்றும் அணுகல் கட்டளைகளைப் பிறப்பிப்பார்: ஒரு கட்டளை பெற்றோர் இருவரும் கனடாவில் உள்ள காலப் பகுதிக்கு ஏற்புடையதாகும், மற்றையது பெற்றோரில் ஒருவர் நாடு கடத்தப்பட்டால் ஏற்புடையதாகும்.

## எனது பிள்ளையை என்னுடன் அழைத்துச் செல்வதற்கு நான் என்ன செய்யலாம்?

| உங்கள் நிலைமை | என்ன செய்வது |
|---|---|
| நீதிபதி அகற்றாக் கட்டளையொன்றை பிறப்பிக்கிறார், அத்துடன் நீங்கள் நாடு கடத்தப்படலாம் என நீங்கள் அறிவீர்கள் என்றிருப்பின் | உங்கள் பிள்ளைக்கான அகற்றாக் கட்டளையை இரத்துச் செய்யுமாறு நீதிபதியிடம் கோரும் அவசரப் பிரேரணையொன்றை நீங்கள் குடும்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். அத்துடன் உங்கள் வழக்கில் குறிப்பிடத்தக்க, எதிர்பாராத மாற்றங்கள் இருந்தாலன்றி நடைமுறைக்கு வரக்கூடிய அவசரப் பிரேரணையொன்றுக்கு அனுமதி வழங்குமாறும் நீதிபதியிடம் நீங்கள் கோரலாம். |
| உங்களுக்கு பாதுகாவலர் உரிமை உள்ளது | நீங்கள் கனடாவை விட்டு வெளியேறும் போது உங்கள் பிள்ளையை உங்களுடன் அழைத்துச் செல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு குடும்ப நீதிமன்றம் உதவி செய்யும். |
| உங்களுக்கு பாதுகாவலர் உரிமை உள்ளது, ஆனால் நீங்கள் நாடு கடத்தப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளீர்கள், அத்துடன் அகற்றாக் கட்டளையொன்று நடைமுறையிலுள்ளது | சாத்தியமான வரையில் விரைவாக குடிவரவு வழக்கறிஞரொருவருடன் பேசுங்கள். |

## நானும் எனது வாழ்க்கைத் துணையும் திருமணம் செய்த போது, எப்போதாவது நாங்கள் பிரிவதாயின் எமது பிள்ளைகளின் பாதுகாவல் பொறுப்பை நான் இழப்பதாக நாங்கள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம். இப்போது நாங்கள் பிரிகின்றோம். அதன் கருத்து பாதுகாவல் அல்லது அணுகலுக்கான வாய்ப்பு எனக்கு கிடைக்காது என்பதா?

இல்லை. ஒரு தம்பதியினர் திருமணம் செய்கின்ற போது பின்னர் ஒரு காலத்தில் அவர்கள் பிரிவார்களாயின் அவர்களில் யார் பாதுகாவல் அல்லது அணுகல் உரிமையைப் பெற வேண்டும் என்று முன்கூட்டி உடன்பாட்டுக்கு வர முடியாது என்று ஒண்டாரியோவின் *குடும்பச் சட்டம் (Family Law Act)* கூறுகின்றது. பாதுகாவல் அல்லது அணுகல் ஏற்பாடுகளை விளக்குகின்ற உங்கள் ஒப்பந்தத்தின் பகுதியை நடைமுறைப்படுத்த முடியாது.

## உடன்படிக்கையை கனடாவில் அல்லது எமது சொந்த நாட்டில் செய்திருப்பது முக்கியத்துவம் பெறுகின்றதா?

இல்லை. உடன்படிக்கை கனடாவில் செய்யப்பட்டதா அல்லது மற்றொரு நாட்டில் செய்யப்பட்டதா என்பது முக்கியமானதன்று. பிள்ளையின் சிறந்த நலன்களை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்தினால் தீர்மானமொன்று எடுக்கப்படும்.

# குறிப்புக்கள்